மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

அசல் வழக்கு எண்.182/2018

2025 ம் ஆண்டு நவம்பர் 26 ம் நாள் புதன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கந்தசாமி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

26.11.2025 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. வாதிகள் எனது உறவினர்களா என்றால் எனது சித்தப்பா மகன்கள். வழக்கு நடக்கும் விபரங்கள் வாதிகள் சொல்லி தான் எனக்கு தெரியுமா என்றால் அதற்கு முன்பே தெரியும். எனது பூர்வீகம் நிழலி. தாவா சொத்துக்கள் எந்த கிராமத்தில் உள்ளது என்றால் நிழலி கிராமத்தில் உள்ளது. தாவா சொத்துக்கள் ஆரம்பத்திலிருந்து தரிசு பூமிகளாக தான் உள்ளது என்றால் இல்லை பட்டா பூமியாக இருந்தது ரீ.சர்வேயில் அதை தவறாக மாற்றி விட்டார்கள். 25 ஆண்டுகளாக தாவா சொத்துகளுக்கு பிஏபி வாய்க்கால் பாசனம் உள்ளது.

2. தாவா சொத்துக்களின் காலை எண்கள் எனக்கு தெரியுமா என்றால் தற்போது ஞாபகம் இல்லை தாவா சொத்துக்களின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 2-3/4 ஏக்கர். தாவா சொத்துக்கள் ஆரம்பத்திலிருந்து யாராலும் அனுபவம் செய்து வரப்படாமல் தரிசாக

தான் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கு எந்த ஒரு தண்ணீர் பாசன வசதியும் இல்லை என்றும், தாவா சொத்தில் எவ்வித விவசாய பணிகளும் செய்யப்பட்டு வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

3. தாவா சொத்தில் எந்த விதமான விவசாயமும் செய்யப்படாத காரணத்தினால் தான் அதற்கான வருவாய்த்துறை ஆவணங்களில் தீர்வை இல்லாத தரிசு என தாவா சொத்து வகைப்பாடு செய்யப்பட்டு கண்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் தீர்வை இல்லாத தரிசு என்ற நிலையில் அரசின் பராமரிப்பிலும் பாதுகாப்பிலும் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல.

4. தாவா சொத்துகளுக்கு அருகில் எனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் உள்ளது என்பதை காண்பிக்க கூடிய வகையில் நான் ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் நான் வாதிகள் எனக்கு உறவினர்கள் என்பதால் அவர்கள் சொல்லிக் கொடுத்தவாறு அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.11.26 19:07:51 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்